Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 26, 2023

புதன்கிழமை 26, 2023 | ஒளி: 09 கதிர்: 048 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ FREE

## தகர்கிறது தங்க கனவு



ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால், உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக உள்ளூர் தங்க வணிகர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



### சர்வகட்சி மாநாடு

# ஏமாற்று வித்தையெனில் ‘டெலிபோன்’ வெளியேறும்

அரசியல் ஏமாற்று வித்தைகள் இல்லாமல், சரியான முறையில் கலந்துரையாடலுக்கு வருவீர்களாக இருந்தால் வாருங்கள் என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில், அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு ஐ.ம.ச வெளியேறும் என்றார்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இடையே பொது நிகழ்ச்சி நிரல், வேலைத்திட்டம், கருத்து ஒற்றுமை, கூட்டுப் பொறுப்புடன் ஒரு கருத்துடன் செயற்படும் நிலைப்பாடுகள் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



### 13 க்கு எதிரான 22

## பாதாளத்துக்குள் நாட்டை தள்ளும்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்கும் வகையில் 22ஆம் திருத்தம் கொண்டுவரப்படுமாயின் அது நாட்டை பாதாளத்துக்குள் தள்ளுமென தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இந்த முயற்சியை வன்மையாக கண்டித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 3 வயது குழந்தை மீது கொதி நீரை ஊற்றிய தந்தை

கௌசல்யா

மதுபோதையில் வீட்டுக்கு வந்த ஆறு பிள்ளைகளின் தந்தை, தன்னுடைய 3 வயதுடைய ஆறாவது குழந்தையின் மீது கொதிநீரை ஊற்றியுள்ளார். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெயாவள் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## தமிழ்க் கட்சிகளின் கடிதத்தை மோடி சாதகமாக பரிசீலித்தார்



எஸ் தில்லைநாதன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து அனுப்பிய கடிதத்தை இந்திய பிரதமர் சாதகமாக பரிசீலித்துள்ளார். எமது கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையே, இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சித் தலைவரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மிக நீண்டகாலமாக சமஷ்டி அமைப்புக்கே வாக்களித்துள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முழுமையாக அடைவதே எமது இறுதி இலக்கு. அதற்கு இந்தியாவின் அனுசரணை எமக்கு தேவையென்பதை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

தொடர்ச்சி P2



## பாப்பரசரின் இலங்கை பிரதிநிதி நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு விஜயம்


யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பிறாயன் ஊடக்வே, நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு செவ்வாய்க்கிழமை (25) சென்றிருந்தார். அவருடன் யாழ். மாவட்ட குரு முதல்வரும் வந்திருந்தார். நிதர்ஷன் வினோத்

## ரூபாய் மதிப்பில் தொடர் சரிவு

ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை முன்னைய தினத்துடன் ஒப்பிடுகையில் செவ்வாய்க்கிழமை (25) அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின்படி ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 323.03 ரூபாயாகவும், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 336.16 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.



## தமிழக மீனவர்கள் 9 பேருக்கும் 9 வரை விளக்கமறியல்

எம்.றொசாந்த்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் ஒன்பது பேரையும் எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## அலையாக வந்த அரசியல் கட்சிகள் அலையுடன் அடிபட்டுப் போயின



கடந்த போராட்டத்தின் மூலம் அலையாக வந்த சில அரசியல் கட்சிகள், இன்று அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கட்சியின் புதிய உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறிய போது, ‘மொட்டை’ப் பாதுகாக்க நாங்கள் மாத்திரமே எஞ்சியிருந்தோம் என்றார்.

தொடர்ச்சி P2

## ஜே.வி.பி பங்கேற்காது



தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவ ப்படுத்தும் கட்சித் தலைவர்களை அறிவூட்டும் சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை (26) நடைபெறவுள்ளது.


தொடர்ச்சி P2

### ‘ரோயல் பார்க்’ படுகொலை:

## ஜனாதிபதி பொது மன்னிப்பு விவகார தீர்ப்பு ஒத்திவைப்பு

‘ரோயல் பார்க்’ படுகொலை குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கிமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை நிறைவு செய்துள்ள உயர் நீதிமன்றம் தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

தொடர்ச்சி P2



## தாயும் கைக்குழந்தையும் 8 நாளுக்கு பின்னர் மீட்பு

நவீ



காணாமல் போன இளம் தாயும், அவருடைய ஒன்றரை வயது குழந்தையும் எட்டு நாள்களுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராத்தங்கொட தோட்டம், புதுக்காடு பிரிவில் வசித்து வந்த 23 வயதுடைய இளம் தாய், தனது ஒன்றரை வயது குழந்தையுடன் கடந்த 17ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

தொடர்ச்சி P2

## கடன் மறுசீரமைப்புக்கு ஐ.நா ஒத்துழைப்பு நல்கும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிராஞ்சுக்கும் இடையிலான சந்திப்பு, ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்றது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கான பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கையின் நிதி தொடர்பான சவால்களை முறியடிப்பதற்கும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் கடன் மறுசீரமைப்பிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பை வழங்குவதாக மார்க் ஆன்ட்ரே தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத் திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு கையளித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதுமே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும், அதற்காக எதிர்காலத்தில் நாட்டில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் இலங்கையும் ஐக்கிய நாடுகள் சபையும் நெருக்கமாக செயற்படவும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஏமாற்று வித்தையெனில் ‘டெலிபோன்’ வெளியேறும்

நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி ஒருவேளை இந்தக் கலந்துரையாடலுக்குச் சென்றாலும், இந்தக் கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில், அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு வெளியேறும் என்றார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் பிபில மெதகம தேசிய பாடசாலைக்கு பஸ் வழங்கும் நிகழ்வில் செவ்வாய்க்கிழமை (25) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் பேச்சுவார்த்தையை நேர்மையுடன் நடத்தினால் மட்டுமே வெற்றி கிடைக்கும் என்றும், வெற்றிபெற வேண்டுமானால், பேச்சுவார்த்தைகள் தூய்மையான நோக்கத்துடன் நடக்க வேண்டும் என்றும், அது அரசியல் ஏமாற்று வித்தையாக இருக்கக்கூடாது என்றும், நாட்டு நலனுக்காக செய்யப்படும் பணியாக பேச்சுவார்த்தை அமையப்பெறுவதாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திடம் தெளிவான வேலைத்திட்டம் இருக்க வேண்டும் என்றும், இந்தக் கலந்துரையாடல்களுக்கு தாம் அழைக்கப்பட்ட போதிலும், நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் குறித்து தமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும், நாட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் பக்கம் இருந்து எதிர்க்கட்சி இதில் கலந்து கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 134 உறுப்பினர்களுக்கும் இடையில் பல கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. கலந்துரையாடலுக்கு வருவதற்கு முன்னர் கருத்து வேறுபாடுகளை சமாளித்து ஒரு நிலைப்பட்ட கருத்தொற்றுமைக்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# பாதாளத்துக்குள் நாட்டை தள்ளும்

இலங்கையில் நடைமுறையில் உள்ளது என்று சொல்லப்படுகின்ற அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கி, 22ஆவது யாப்பு மாற்றமாக புதிய சட்டத்தை கொண்டு வர இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கூறிய கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, அவரது கருத்தை எதிர்க்கிறேன் என்றார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (25) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தை நீக்கி 22ஆம் திருத்தத்தை கொண்டு வருவதற்கான ஓர் எண்ணப்பாட்டுக்கு அவர்கள் வருவார்களாக இருந்தால், அது முற்று முழுதாக இலங்கையை படு பாதாளத்துக்குள் தள்ளும் நிலைமையை ஏற்படுத்தும் என்றார்.

தமிழர்கள் இயக்கங்கள், நாகர்களாக இலங்கையினுடைய தேசிய இனமாக பூர்வீக குடிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரித்து இருக்கிறது. வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்களினுடைய எண்ணக் கருக்களுக்கு அமைவாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாகவோ, கருத்துக் கணிப்பின் ஊடாகவும் அவர்கள் விரும்புகிற ஆட்சி முறையில் இருக்கும் உரித்து அவர்களுக்கு இருக்கிறது என்றார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது கூட முற்று முழுதாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றார். ஒற்றையாட்சியின் கீழ் அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டு வரப்படும் போது, அது தமிழர்களுக்கு தீர்வாக அமையாது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, அவரது கருத்தை எதிர்க்கிறேன் என்றார்.

# 3 வயது குழந்தை மீது கொதி நீரை ஊற்றிய தந்தை

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அவருடைய மனைவி கொழும்பில் வேலை செய்து வருகின்றார். அவருடைய ஆறு குழந்தைகளையும் அவரது அம்மாவே கவனித்து வருகின்றார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (24) இரவு மதுபோதையில் வந்த 6 பிள்ளைகளின் தந்தை, தனது 6 ஆவது பிள்ளையின் மீது கொதி நீரை ஊற்றியுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த குழந்தை, லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரனைகளை லிந்துலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பிள்ளையின் மீது கொதி நீரை ஊற்றிய நபர், பிரிதொரு வழக்கில் ஆஜராக நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளதாகவும் அவ்விடத்திலேயே அவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ்க் கட்சிகளின் கடிதத்தை மோடி சாதகமாக பரிசீலித்தார்

இந்தப் பயணத்தில் முதல்படியாக, 13ஆவது திருத்தத்தை உடனடியாக- முழுமையாக அமல்படுத்த வேண்டுமென இந்திய பிரதமருக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து கடிதம் அனுப்பியிருந்தன.

எமது கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையாடலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி கூறியுள்ளர். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றி, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென நரேந்திர மோடி வலயுறுத்தியுள்ளார். எமது கடிதத்தை இந்திய பிரதமர் சாதகமாக பரிசீலித்துள்ளார் என்றார்.

# ஜனாதிபதி பொது மன்னிப்பு விவகார தீர்ப்பு ஒத்திவைப்பு

ஜூட் ஷ்ரமந்த ஜயமஹாவிற்கு பொதுமன்னிப்பு வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்திற்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரரான மகளிர் மற்றும் ஊடக ஒன்றியத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இரு தரப்பினரதும் வாதங்களை கேட்டறிந்துகொண்ட மூன்று நீதியரசர்களை் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு, தீர்ப்பை பின்னர் வழங்குவதாக அறிவித்துள்ளது.

இந்த அமர்வு நீதியரசர்களான எஸ். துரைராஜ், யசந்த கோட்டாகொட, ஜனக்க டி சில்வா ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் நடைபெற்றது.

2005ஆம் ஆண்டு ரோயல் பார்க் குடியிருப்புத் தொகுதியில் 19 வயதான ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு ஜூட் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட அவருக்கு மைத்திரிபால சிறிசேன தனது ஜனாதிபதி பதவிக்காலத்தில் ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அலையாக வந்த அரசியல் கட்சிகள் அலையுடன் அடிபட்டுப் போயின

‘மொட்டு’ மக்களின் கட்சி எனவும், அந்தக் கட்சியை யாராலும் கவிழ்க்க முடியாது எனவும் வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொம்பே தொகுதிக் குழுக் கூட்டம் அண்மையில் (23) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“மொட்டு’ இலங்கை சுதந்திரக் கட்சியின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேனவுடனான பிளவுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கட்சி தொடங்கும் போது, புதிய கட்சிகள் அமைத்தால், வீதிகளில் ஊர்வலம் நடத்துவோம் என, சில தலைவர்கள் கூறினர். அதைச் சொல்லி, பல சவால்களுக்கு மத்தியில் வீதி களில் நடந்து, மக்களை திரட்டி இந்தக் கட்சியை உருவாக்கினோம்.

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கினார். 2015இல் அவர் தோற்று வீட்டுக்குச் சென்றபோது, பெரும்பான்மையான மக்கள் சோகத்தில் இருந்தனர். கண்களில் கண்ணீர் வந்தது. எம்முடன் இருந்த மக்களுக்கு நீதி வழங்குவதற்காகவே மஹிந்த காற்றை உருவாக்கினோம். அந்த மக்கள் மத்தியில் செல்ல எங்களுக்கு ஒரு கட்சி தேவைப்பட்டது. அதனால் ஊர் மக்களை ஒன்று திரட்டி, இந்தக் கட்சியை உருவாக்கினோம். நாங்கள் உருவாக்கிய இந்தக் கட்சி இன்றும் பலமான கட்சியாக உள்ளது. ‘மொட்டு’ மக்களின் கட்சி. இந்தக் கட்சியை யாராலும் கவிழ்க்க முடியாது என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. இது திட்டமிட்ட வகையில் செய்யப்பட்டது. இதன் பின்னணியில் ஜே.வி. பி இருக்கிறது. ஜனநாயக முறையில் ஆட்சிக்கு வர முடியாது என்பது அவர்களுக்கு தெரியும். எனவே, அவர்கள் மொட்டை உடைக்கும் பணியில் ஈடுபட்டனர். அடித்தாலும், வீடுகளுக்குத் தீ வைத்தாலும் நாங்கள் பின்னோக்கிப் போக மாட்டோம் என்பதை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1977இல் எனது தந்தையின் வீடு எரிக்கப்பட்டது. இவை எமக்குப் பழகிவிட்டன என்றார்.

# ஜே.வி.பி பங்கேற்காது

இதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, இந்தச் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்காது என சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

# தாயும் கைக்குழந்தையும் 8 நாளுக்கு பின்னர் மீட்பு

ரிக்கிலகஸ்கட வைத்தியசாலைக்கு செல்வதாக குழந்தையையும் தூக்கிக்கொண்டு, தனது கணவனிடம் கூறிச் சென்ற அப்பெண், அன்றையதினம் வீடு திரும்பவில்லை.

பதற்றமடைந்த கணவன் ரிக்கிலகஸ்கட வைத்தியசாலை மற்றும் பல இடங்களில் தேடிய பின்னர் ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்,

கணவரின் முறைப்பாட்டுக்கு அமைய ஹங்குராங்கெத்த பொலிஸார், அந்தப் பெண் சென்ற இடங்களில் உள்ள சி.சி. ரிவி கமெரா காட்சிகள் மூலமாக விசாரணைகளை மேற்கொண்டனர்,

இதனை தொடர்ந்து ஹங்காராங்கெத்த பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்தப் பெண், தன்னுடைய குழந்தையுடன் அவிசாவெல்ல பிரதேசத்தில் இருப்பதாக தகவல் கிடைத்தது. அந்தத் தகவலை அவிசாவெல்ல பொலிஸாருக்கு ஹங்குராங்கெத்த பொலிஸார் அறிவித்துள்ளனர். அதனையடுத்தே அந்தப் பெண் இருக்கும் இடத்தை தேடி கண்டுபிடித்து தாயையும் பிள்ளையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கணவனின் தொந்தரவு காரணமாகவே, இந்தப் பெண் வீட்டை வீட்டு வெளியேறியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அப்பெண்ணின் கணவன், திங்கட்கிழமை (24) தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றதை அடுத்து, காப்பாற்றப்பட்டு ரிக்கிலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த ஹங்குராங்கெத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

# சாணக்கியனை ‘போடா’ என்றார் பிள்ளையான்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தனியார் போக்குவரத்து சேவையில் சட்டவிரோதமாக அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் ‘சச்சின் ரவல்’ பஸ் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரினார்.

கூட்டத்துக்கு தலைமை தாங்கிய மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சி.சந்திரகாந்தன், சாணக்கியதை பார்த்து “போடா” எனக் காட்டமாக தெரிவித்ததையடுத்து அங்கு அமளிதுமளி ஏற்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹ்மத், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா. சாணக்கியன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பத்மராஜா கலாமதி, திணைக்கள பணிப்பாளர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, மயிலத்தமடு - மாதவனை மேச்சல் தரை, கால்நடைகளின் மேச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தமிழ் மன்னர்களின் வரலாற்றை குறிக்கும் தொல்லியல் பகுதியான குளத்தை சட்டவிரோதமாக மணல் அகழ்வும் வீடியோ காட்சியை ஏனையவர்கள் பார்ப்பதற்காக புரடெக்டரில் போடுமாறு தெரிவித்த போது, அங்கு பிள்ளையானுக்கும் வியாழேந்திரனுக்கும் இடையே வாக்குவாம் ஏற்பட்டது.

இந்த நிலையில், அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹ்மத் தற்போது காத்தான்குடி கல்வி அதிகாரியை மாற்றியது மற்றும் ஏறாவூரில் நகரசபை குப்பைகளை கொட்டுவதற்கான இடம் தொடர்பாகவும் கடந்த காலத்தில் கிழக்கு முதலமைச்சாரக இருக்கும் போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு கொள்வனவு செய்து கொடுத்த வாகனத்தை எவ்வாறு தற்போதைய ஆளுநர் பாவிக்க முடியும் எனவும் ஒரு குழு அமைக்க வேண்டும் என தெரிவித்தார்

இதன் போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் உங்களுடைய தனிப்பட்ட பிரச்சினை கதைப்பற்கு இங்குவரவில்லை. அப்படியென்றால் நாங்கள் வெளியேறுவதாகவும் இந்தக் குழுவை எக்காரணம் கொண்டும் நாங்கள் அனுமதிக்க முடியாது; இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தை துஸ்பிரயோகம் செய்வதாகும் என்றார்.

# தமிழக மீனவர்கள் 9 பேருக்கும் 9 வரை விளக்கமறியல்

நெடுந்தீவு கடற்பரப்பில் திங்கட்கிழமை (24) இரவு தமிழக கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்ட போது, அப்பகுதியில் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர், தமிழக கடற்றொழிலாளர்களின் 2 படகை கைப்பற்றினர். அதிலிருந்த 9 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக கடற்றொழிலாளர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை (25) முற்படுத்தினர். அதன்போதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தீர்மானங்கள்

# விழலுக்கு இறைத்த நீர்

## பொலிஸாரின் ஆதரவுடன் தொடரும் மணல் அகழ்வுகள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி, குடமுருட்டி, முட்கொம்பன், குஞ்சுப்பரந்தன், நீவில் ஆகிய பகுதிகளில், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினது தீர்மானங்களை மீறி, பூநகரி, கிளிநொச்சி பொலிஸாரின் முழுமையான ஆதரவுடன் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள், பொது அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றன.

மே மாதம் மூன்றாம் திகதியும் ஜூன் மாதம் முதலாம் திகதியும் ஜூன் 13ஆம் திகதியும் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில், இந்த




விடயம் தொடர்பாக நீண்ட நேரமாக விவாதிக்கப்பட்டு, பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆனாலும், இந்தத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் மீறி கிளிநொச்சி, பூநகரி பொலிஸாரின் முழுமையான ஆதரவுடனும் அவர்களது பாதுகாப்புடனும் நாளாந்தம் 40 முதல் 55 கியூப் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதாக, மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகளால் மேற்படி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பகிரங்கமாக சுட்டிக்காட்டப்பட்டது.

நேற்று முன்தினம் பகல், பூநகரி பொலிஸ் நிலையத்துக்குச் சொந்தமான ஓட்டோவில் குறித்த பகுதிக்கு வந்த மூன்று பொலிஸார், குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர்களை குடமுருட்டி ஆற்றுப் பகுதியில் இருந்து பாதுகாப்பாக பிரதான வீதிக்கு கொண்டு வந்து வழியனுப்பி இருந்தனர்.

இவ்வாறு சட்டத்தின் மூலம் வளங்களை பாதுகாக்க வேண்டிய அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகளின் துணையுடன், மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையானது பல்வேறு மட்டங்களிலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இந்திய இலங்கை உறவின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு

■ எஸ்.கே.குமார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான குழு இந்தியாவுக்கு விஜயம் செய்து, இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் அபி விருத்திக்காக மூன்று பில்லியன் ரூபாய் நிதியை வழங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணக்கம் தெரிவித்தமை இந்திய இலங்கை உறவின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்

இதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு மலையக மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வரலாற்று சிறப்புமிக்க இவ்விஜயம் நாட்டின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீள்கட்டமைப்பை இலக்காகவே கொண்டு அமைந்தது என்பது முக்கிய அம்சமாகும்.



கைத்தொழில், வலுசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் தொழில்நுட்பம், கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் உற்பத்தி போன்ற பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுடன் இலங்கை இந்தியாவிற்கு இடையிலான விமான வழி மற்றும் கப்பல் வழி போக்குவரத்து துறை அபிவிருத்தி தொடர்பாகவும் முக்கிய அவதானம் செலுத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்நிலையில் எமது மக்களின் நலனுக்காக மூன்று பில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்கும் தீர்மானம் வரலாற்று சிறப்புமிக்க விடயம். ஆகவே பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

மேலும் நிதி உதவியை கல்வி அபிவிருத்தி மற்றும் சுகாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்பட அவர்கள் தீர்மானித்த உள்ள நிலையில், பெருந்தோட்ட சுகாதாரத்துறை மற்றும் விஞ்ஞான துறை சார்ந்த கல்வித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக தான் அமைச்சரிடம் ஆவன செய்ய உள்ளதாக பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

## குடும்ப தகராறில் உயிரை விட்டார் கணவன்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

இளம் குடும்பஸ்தர் ஒருவர் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவமொன்று வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி, நாவலடி எனும் பகுதியில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றுள்ளது.

மனைவி வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் தொலைபேசி உரையாடலின் போது இவ்விருவருக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளது. இது தொடரவே, கணவன் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

## வங்கிகளுக்கு முன்னால் யாசகரின் தொல்லை அதிகரிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு முன்னால், தனியாகவும் குடும்பத்துடனும் யாசகம் கேட்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் தமது தேவை முடிந்து, வங்கியை விட்டு வெளியேறும் போது, கையேந்தி யாசகம் கேட்பதால் வாடிக்கையாளர்கள் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வங்கியில் பணம் எடுக்கும் போது, சில்லறை காசு இல்லாத சந்தர்ப்பங்களிலும் வங்கியில் பணம் எடுக்காத நிலைமையிலும் யாசகம் கேட்போருக்கு கொடுக்க பணம் இல்லாமல் திண்டாடும் சந்தர்ப்பத்தை, வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். வங்கிகளுக்கு முன்னால் யாசகம் கேட்போரில் அதிகளவில் பெண்களே காணப்படுகின்றனர்.

## மீன்களில் கடல் மண் கலப்பு அகப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை

■ அஸ்ஹர் இப்றாஹிம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம் றிபாஸின் பணிப்புரைக்கமைய, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம் றயீஸின் வழிகாட்டலில், மீன்களின் தன்மையை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறையில் மோசடி செய்வதற்காகவும், கடல் மண் கலப்படம் செய்து விற்பனை செய்து வந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில், மீன் விற்பனையில் ஈடுபடுவோர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பறவைகளை விரட்டிய சிறுமியை காட்டுக்குள் இழுத்த கோப்ரல்

பாடசாலை விட்டு வீட்டுக்குத் திரும்பிய சிறுமி, பறவைகளை விரட்டிக்கொண்டிருந்த போது, அச்சிறுமியை காட்டுக்குள் இழுத்துச் செல்ல முயன்ற குற்றச்சாட்டின் கீழ், இராணுவ கோப்ரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனமடுவ பிரதேசத்தில் வயல்வெளியில் பறவைகளை துரத்திச் சென்ற 11 வயது சிறுமியை, காட்டுக்குள் இழுத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் இராணுவ கோப்ரல் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர் அம்பாறை 24ஆவது காலாட்படை தலைமையகத்தில் கடமைகளில் ஈடுபட்டு வரும் 38 வயதுடைய இராணுவ கோப்ரல் என தெரிவிக்கப்படுகிறது. இவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

பாடசாலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய சிறுமி, வீட்டுக்கு அருகில் உள்ள வயலில் மாலையில் பறவைகளை துரத்திக் கொண்டிருந்த வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது மூத்த சகோதரியை யாரோ இழுத்துச் செல்வதைக் கண்ட இளைய சகோதரர், தனது தாயிடம் சத்தமிட்டு கூறியுள்ளார். தாய், அலறி அழத் தொடங்கியதை அடுத்து, சந்தேகமடைந்த இராணுவக் கோப்ரல் சிறுமியைக் கைவிட்டு வேறு திசையில் ஓடியுள்ளார்.

சிறுமியை காட்டுக்குள் கோப்ரல் இழுத்துச் சென்றதாகவும், இதனால் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கச்சேரிக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்:

## 12 பண்ணையாளருக்கு எதிராக பொலிஸார் வழக்கு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில், கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது, கச்சேரிக்கு முன்பாக ஒன்று கூடி, நுழைவாசலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், நீதிமன்றில் ஆஜராகிய நான்கு பேரையும் சொந்தப் பிணையில் செல்ல அனுமதித்து, நவம்பர் 27ஆம் திகதி ஆஜராகுமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று முன்தினம் (24) உத்தரவிட்டார்

மயிலதமடு, மாதவனை கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்கள், தமது மேச்சல் தரை காணிகளை தனியார் ஆக்கிரமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, மாவட்ட செயலகத்துக்குள் எவரும் உள்நுழையவோ வெளிச் செல்லவோ விடாது தடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, 12 பேருக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார், சட்டவிரோத ஒன்றுகூடல், மாவட்ட செயலக வாசலை வழிமறித்து அமைதிக்கு பங்கம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு, வழக்கு தாக்கல் செய்தனர்.

## கடவுசீட்டு பெறுவதற்கான கைவிரல் அடையாள இயந்திரம் சாவகச்சேரியில் பழுது

■ எம். றொசாந்த்

கடவுசீட்டு பெறுவதற்காக கைவிரல் அடையாளம் வைக்கும் இயந்திரம் பழுதடைந்து உள்ளமையால் மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

'ஒன்லைன்' மூலம் கடவுசீட்டை பெற்றுக்கொள்பவர்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில், கைவிரல் அடையாளம் வைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் ஆகிய அலுவங்களிலேயே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உள்ள இயந்திரம் கடந்த இரு வார காலமாகப் பழுதடைந்துள்ளது. அதனால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்க முடியாத நிலையில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடவுசீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது, எந்தப் பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்க விரும்புகிறோம் என்பதை தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யும் பிரதேச செயலகத்திற்கு கைவிரல் அடையாளம் வைக்க வருமாறு எமது அலைபேசிக்கு குறுந்தகவல் கிடைக்கப்பெறும். அதன் பின்னர் அந்தப் பிரதேச செயலகத்துக்குச் சென்று கைவிரல் அடையாளத்தை வைக்க முடியும்.



# இதுதான் ஆரம்பமல்ல; ஆனால், இறுதியானதாய் இருக்க வேண்டும்

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களை அறிவூட்டும் சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று (26) புதன்கிழமை மாலை 5.30க்கு நடைபெறவுள்ளது.

அதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட ஓரிரு நிமிடங்களுக்குள், இந்த மாநாட்டில் தாங்கள் பங்கேற்க போவதில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு, இன்று (26) மாலைக்குள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இடையே, பொது நிகழ்ச்சி நிரல், வேலைத்திட்டம், கருத்து ஒற்றுமை, கூட்டுப் பொறுப்புடன் ஒரு கருத்துடன் செயற்படும் நிலைப்பாடுகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசியல் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டால் பேச்சு மேசையில் இருந்து அடுத்த நிமிடமே தங்களுடைய ஐக்கிய மக்கள் சக்தி வெளியேறுமென எச்சரித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உரிமையை பெற்றுக்கொடுத்தல், பிரச்சினைகளை இனங்காணுதல் ஆகியவற்றுக்காக நடைபெறும் முதலாவது மாநாடு இதுவல்ல. ஆனால், இதுதான் இறுதியானதாய் இருக்கவேண்டுமென்பது பலரது அவாவாகும்.

பேச்சுவார்த்தை மேசையில் இருந்து எழுந்து சென்று, குழப்பி விடுவோரும் இருக்கதான் செய்கின்றனர். “நாட்டை பிரிக்கும் முயற்சிக்கு நாங்கள் உடந்தையாக இருக்கமாட்டோம்” என்றெல்லாம் தேசப்பற்றாளர்கள் எனத் தங்களை இனங்காட்டிக்கொள்வோர் கடந்தகாலங்களில் விமர்சங்களை முன்வைத்தனர். அத்துடன் அந்தப் பேச்சுக்கு மூச்சு நின்றுவிடும்.

ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஆட்சியில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இருக்கும் காலக்கட்டத்தில், இப்பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொள்ளாவிடின், இனியொருபோதும் அதற்கான சாத்தியக்கூறுகளே இல்லையென மூத்த தலைமைகள் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அதற்கான காலம் கனிந்துள்ளது. எனினும், பேச்சுவார்த்தையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பிலான நிகழ்ச்சி நிரல் இதுவரையில் கையில் கிடைக்கவில்லை என்பது ஒரு குறைப்பாடாகும். நிகழ்ச்சி நிரல் இன்றி, மேசையில் அமர்ந்திருக்க முடியாது என்பது நியாயமானது. ஆகையால், இன்றைய தினமே நிகழ்ச்சி நிரலை முன்வைப்பது நல்லது.

அத்துடன், பேச்சை நிறைவு செய்வதற்கான காலத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், இடைச்செருகல்களால் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்பட்டுவிடும். அது, இந்த இனநல்லிணக்க பேச்சுவார்த்தையை குழப்பிவிடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

யுத்தத்துக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு பேச்சுவார்தையும் இடையிலேயே முறிக்கப்பட்டன. புது ஆட்சியில், ஆதரவுக் கரம் நீட்டுமாறு அழைப்பு விடுத்து, இடையிலேயே கையை கடித்த வரலாறும் உள்ளது. ஆகையால், இன்று (26) ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்தை ஆரம்பமாக இருக்கக்கூடாது. இறுதியாய் அமையவேண்டும் என்பதே இன நல்லிணக்கத்தை விரும்பும் சகலரினதும் அவாவாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# சட்டத்தில் உள்ளதை அமலாக்க எத்தனை கூட்டங்கள்?



எம்.எஸ்.எம் ஐயூப்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று ‘சர்வகட்சி’ மாநாட்டை கூட்டியிருக்கிறார். ஜனாதிபதி வியாழக்கிழமை (20), வெள்ளிக்கிழமை (21) ஆகிய இருதினங்களும் மேற்கொண்ட இந்திய விஜயத்துக்கு முன்னர், இந்த மாநாட்டுக்கான ஆயத்தங்கள் எதுவும் காண்பதற்கு இருக்கவில்லை.

அவரது இந்திய விஜயத்தின் போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்திய தலைவர்கள், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை மீண்டும் வலியுறுத்தி இருந்தனர். அதுவே இந்த மாநாட்டுக்கான காரணம் என்றே தெரிகிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க, கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதியும் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். அதில் பல கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட போதும், அது சர்வகட்சி மாநாடாக இருக்கவில்லை. ஏனெனில், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில கட்சிகள், அதில் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, 1950களில் இருந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கானதாக இருக்கலாம். சர்வகட்சி மாநாடு என்ற பெயரிலும் அந்த அர்த்தத்திலும் நடைபெறற பேச்சுவார்த்தைகளை எண்ணிப் பார்த்தாலே, ஒருவர் மயங்கி விழக்கூடும்.

1984ஆம் ஆண்டு, ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவால் வட்ட மேசை மாநாடு என்ற பெயரில், ஒரு சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. அவர், 1986ஆம் ஆண்டும் அரசியல் கட்சி மாநாடு (PPC) என்ற பெயரில் ஒரு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார்.

1989ஆம் ஆண்டு, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அதில் யோகரத்தினம் (யோகி) உள்ளிட்ட தமிழீழ விடுதலை புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2006ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அது பின்னர் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு (APRC) என்று அழைக்கப்பட்டது. இந்தக் குழு 60க்கு மேற்பட்ட கூட்டங்களை நடத்தி, 2008 ஆம் ஆண்டு இடைக்கால அறிக்கையை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது.

அவற்றுக்குப் புறம்பாக, 1985 ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தை, 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்தைகள், ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் 1991ஆம் ஆண்டு மங்கள முனசிங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இனப்பிரச்சினை தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் 1997ஆம் ஆண்டு பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழு என்று எத்தனையோ கூட்டத்தொடர்களில் இனப் பிரச்சினை ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமிழீழ விடுதலை புலிகள் அமைப்போடு, 2002 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட சகல பேச்சுவார்த்தைகளினதும் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, இனியும் இனப்பிரச்சினையைப் பற்றி என்னதான் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறது என்றே கேட்க வேண்டியுள்ளது.

அதனால்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “இனப்பிரச்சினையை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்” என்று கடந்த வருடம் நவம்பர் மாதம் கூறிய போது, “இதுவரை நான்கு தசாப்தங்களாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இருப்பதால், இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தி, முடிவு எடுப்பதற்கு ஒரு நாள் போதுமானது” என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் கூறியிருந்தார்.

கடந்த பல தசாப்தங்களாக ஆரம்பிக்கப்பட்ட சகல பேச்சுவார்த்தைகளும் ஒன்றில் எவ்வித காரணமுமின்றி கைவிடப்பட்டன; அல்லது, சர்ச்சைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டு, பின்னர் மறக்கப்பட்டன. அல்லது, ஒத்திவைக்கட்டு பின்னர் கைவிடப்பட்டடன. அதன் பின்னர், முன்னர் பேச்சுவார்த்தைகள் ஏன் கைவிடப்பட்டன, நிறுத்தப்பட்டன என்பது ஆராயப்படாமல், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இப்போதும் அதுவே நடைபெறப் போகிறது.

இனப்பிரச்சினை விடயத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளும் சர்ச்சைக்குரியவையாகவே இருக்கின்றன. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்த அவர், அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த சகல திட்டங்களையும் எதிர்த்தார்.

புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் நல்லதொரு திட்டம் எனக் கூறியிருந்த, 1995 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா சமர்ப்பித்த திட்டத்தை, ரணிலின் தலைமையிலான ஐ.தே.க முற்றாக எதிர்த்தது. அந்தத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, சந்திரிகா 2000ஆம் ஆண்டு சமர்ப்பித்த புதிய அரசியலமைப்பு நகலை, அவர் முன்னிலையிலேயே ஐ.தே.க எம்பிக்கள் பாராளுமன்றத்தில் எரித்தனர்.

ஆனால், 2001 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்ற அதே ரணில், 2002 ஆம் ஆண்டு புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அந்தப் பேச்சவார்த்தைகளின் ஒரு கட்டத்தில் சமஷ்டி முறையையும் ஏற்றுக் கொண்டார். 2016ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில், புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தார். அந்த நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டன.

கடந்த வருடம் பொதுஜன பெரமுனவின் ஆதரவில் முதலில் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் பதவியேற்ற அவர், கடந்த நவம்பர் மாதம் வரவு - செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், கடந்த பெப்ரவரி நான்காம் திகதி நடைபெறவிருந்த 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு முன்னர், இனப்பிரச்சிசனைக்கு நிரந்தர தீர்வை காண்பதாக கூறினார்.

அவ்வாறாயின், ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டமான அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமலாக்கி, மாகாண சபைத் தேர்தலையும் நடத்துங்கள் என்று தமிழ்க் கட்சிகள் கூறின. கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி, அவர் கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்தின் போது அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வானது, 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலானது என்பதை அவரும் ஏற்றுக் கொண்டார் என்பதையே அது காட்டுகிறது. பின்னர் அதனை மறந்து, ஜனவரி மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பெங்கல் விழாவில் உரையாற்றும் போது, இரண்டு வருடங்களுக்குள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமலாக்குவதாக கூறினார். அதையடுத்து ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போது, இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக கூறினார்.

கடந்த வாரம் தமது இந்திய விஜயத்துக்கு முன்னர், அவர் மீண்டும் தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திய விஜயத்தின் போது, இந்திய தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழமைப் போல வலியுறுத்துவார்கள் என்று அவருக்குத் தெரிந்ததனாலேயே அவர் இந்தக் கூட்டத்தை கூட்டினார்.

பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்காமல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமலாக்கத் தயார் என அவர் அப்போது கூறினார். அரசாங்கத்தின் நேர்மையற்ற தன்மையை, அவ்வேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

அவரது இந்திய விஜயத்தின் போது, வழமைப் போல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்திய தலைவர்கள், தமிழ் மக்களின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதையும் மாகாண சபை தேர்தலை நடத்துவதையும் வலியுறுத்தினர். அவ்வேளையில் இலங்கை தலைவர்கள் எவரும், பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதில்லை என்று கூறவில்லை. நாடு திரும்பியதன், பின்னர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமலாக்குவது தொடர்பாக, சர்வகட்சி மாநாடு கூட்டப்படும் என்று வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி கூறினார். அதுதான் இன்று நடைபெறவிருக்கிறது.

இந்த வரலாற்றுக் கதை, இலங்கை அரசாங்கங்களின் நேர்மையின் அளவை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவும் பிராந்தியத்தின் தமது அரசியல் பொருளாதார நலன்களை முன்நிறுத்தி, இலங்கை தமிழர்களின் கோரிக்கைகள் போன்றவற்றை வெறும் சடங்காக கையாள்கிறது.

தமிழ் தலைவர்களும் அவர்களிடையிலான போட்டியின் காரணமாக படிப்படியாக எதையும் வென்றெடுப்பதை விரும்பவில்லை. இந்நிலைமை, மேலும் பல்லாண்டு காலமாக இவ்வாறே இழுத்தடிக்கப்படும் என்பதே இதன் அர்த்தமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

மனிதரை மனிதர் இரசிக்க வேண்டும். எவரையும் கண்டுகொள்ளாமல், மதிக்காமல், பழகாமல் கண்களை மூடிக்கொண்டு வாழக்கூடாது.

இந்த உலகத்தில்தான் வாழுகின்றோம். வேற்றுக்கிரகத்தில் இருந்து வரவில்லை. வெளிநாடுகளில், காலை நேரத்தில் எவரைக் கண்டாலும் கையசைத்து, ‘ஹாய்’ என்று அவர்களைப் பார்த்து, புன்முறுவலுடன் கூறுவார்கள்.

ஆனால், எங்கள் சனங்கள், தங்களுக்குத் தெரியாதவர்களை முழுமையாக நிராகரித்துவிடுவார்கள். எவரையும் நிராகரித்தால், வெறுக்கும் மனநிலைக்கே தள்ளப்பட்டுவிடுவார்கள்.

ஆனால், பொல்லாத கெட்டவர் என்று தெரிந்தால் கண்டுகொள்ளாமல் போகலாம். ஒருவரைப் புரியாமல் நட்புக்கொள்ளவும் கூடாது. பஸ்ஸில் ஒருதடவையில் பார்த்ததுமே, காதல் கொள்வது சரிவருமா? முழுமையான காதலா இது?

துஷ்டர்கள் காதல் எனும் பெயரில் நடித்து, வலை வீசுகிறார்கள். பல இளைய தலைமுறையினர் எதையும் ஆராய்வதில்லை. பிறர் புத்திமதிகளைக் கேட்பதுமில்லை.

பொதுமைப் பண்பாடுகளில் இருந்து விலகலாகாது. மனிதனை மனிதன் அன்பு செலுத்த வேண்டும். புவனத்தில் பிறக்கும் குழந்தைகள், நற்குணத்துடன் தான் பிறக்கின்றன. அவர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### போதைப்பொருள், கசிப்பு

### பாவனையை தடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பாலிநகர் பகுதியில் போதைப்பொருள், கசிப்பு பாவனைகள் அதிகரித்திருப்பதன் காரணமாக, பல்வேறு வகையான குற்றசெயல்களும் வன்முறைகளும் இடம்பெற்று வருவதாகவும், இவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச பொது அமைப்புகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலிநகர் கிராமத்தில், போதைப்பொருள் பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி என்பன அதிகளவில் காணப்படுகிறது. இதனால், பல்வேறு வன்முறை சம்பவங்களும் குற்றச் செயல்களும் இடம்பெறுகின்றன.

அண்மையில் கூட, வீட்டுக்குள் புகுந்து இளைஞரை சுட்டுக்கொலை செய்த சம்பவத்தின் பின்னணியிலும், போதைப்பொருள் பாவனையே இருப்பதாகவும் சுட்டிக்காட்டி உள்ளன. எனவே, போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு, பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சிலரே, இப்பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனைகளில் ஈடுபடுதல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால், இவ்வாறான விடயங்களில் பொலிஸார் கவனம் எடுத்து, இப்பிரதேசங்களில் இடம்பெறக் கூடிய வன்முறை சம்பவங்களை தடுப்பதற்கு, வழிவகை செய்ய வேண்டும் என பிரதேச பொது அமைப்புகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்





# முல்லைத்தீவில் படைவீரர்களுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது, 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில், 44 அதிகாரிகளும் 1,125 சிப்பாய்களும் உயிரிழந்தனர். உயிரிழந்த படை வீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு, முல்லைத்தீவில் அமைந்துள்ள நினைவு தூபியில் நடைபெற்றது.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் உள்ள போர்வீரர் நினைவுச் சின்னத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக, முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி எம்.கே ஜயவர்தன கலந்து கொண்டார்.

சுப்பிரமணியம் பாஸ்கரன்




# தொழிற்சந்தையும் தொழிற்பயிற்சி வழிகாட்டலும்



மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்துடன் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வானது, பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், களுதாவளை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வில் அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் ஆகிய 30க்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்று, தங்கள் நிறுவனங்களின் சேவைகள் பற்றி பங்கேற்றிருந்த இளைஞர் – யுவதிகளுக்கு தெளிவுபடுத்தியதுடன் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர். பிரதேச செயலக மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர்களான க. ரவீந்திரன், தெ. ராகவன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மல்ராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் 400க்கும் மேற்பட்ட இளைஞர் – யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வி.ரி சகாதேவராஜா





# நேர்முகங பரீட்சைக்கான பயிற்சி பட்டறை


கிழக்கு மாகாண ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் நியமனத்துக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகளுக்கான விசேட பயிற்சி பட்டறை, கல்முனையன்ஸ் போரத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அல்–மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நேர்முகப் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும் பயிற்சிகளும் அனுபவமிக்க வளவாளர்களால் வழங்கப்பட்டதோடு மாதிரி நேர்காணலும் நடத்தப்பட்டன.

நூருல் ஹுதா உமர்

# சித்தத்தில் நிறைந்த சித்தானைக்குட்டி சுவாமிகள்

## இன்று அவரது 72வது குரு பூசையாகும்



'விபுலமாமணி' வி.ரி சகாதேவராஜா

'சித்தருள் சித்தர்' சித்தானைக்குட்டி சுவாமிகளது 72 ஆவது குருபூசை விழா, இன்று (26) புதன்கிழமை சிறப்பாக நடைபெறுகிறது. சுவாமி மகாசமாதி அடைந்த காரைதீவில் அமைந்துள்ள சித்தானைக்குட்டி மடாலயத்தில் இன்று, 72 ஆவது குருபூஜை வழமைபோல் சிறப்பாக நடைபெறுகிறது.

"சித்தத்தில் உறைந்தவராம் சித்தானைக்குட்டி; எங்கள் சித்தமெல்லாம் நிறைந்தவராம் சித்தானைக்குட்டி" என்றவாறாக பக்தர்களால் அன்போடும் பக்தியோடும் நம்பிக்கையோடும் பாடித்துதிக்கப்படும் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள், கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1951 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 21 ஆம் நாள், சுவாதி நட்சத்திர தினத்தன்று ஜீவ சமாதியானார்.

தமிழ் நாட்டில், இராமநாதபுரத்து சிற்றரசர் வம்சமான சேதுபதி வழிவந்து, அவதரித்த இம்மாபெரும் சித்தர், ஆடிய சித்துக்கள் எண்ணிலடங்கா!

இராமநாதபுரத்தை சேதுபதி வம்சத்தைச் சேர்ந்த பல சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இந்தச் சிற்றரசரில் ஒருவருக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு கோவிந்தசாமி என்னும் நாமத்தை பெற்றோர் சூட்டினர். கோவிந்தசாமி அரச குடும்பத்தில் பிறந்த போதும், அவருக்கு அரச போகங்களில் நாட்டம் ஏற்படவில்லை. அதனால் இளமைப் பருவத்திலேயே ஆன்மிக வாழ்க்கையை நாடினார்.

இராமநாதபுரத்தில் ஏற்பட்ட தொற்றுநோய் காரணமாக, நவநாத சித்தரும் பெரியானைக்குட்டி சுவாமிகளும் அங்கு விஜயம் செய்தனர். அவர்கள் தொற்றுநோய் உள்ள வீடுகளுக்குச் சென்று, சமைத்த உணவுகளை வேண்டி உண்டு, தொற்றுநோயை தாமே உள்வாங்கி, நோயாளிகளைச் சுகப்படுத்தினர். அந்த அற்புதத்தைக் கேள்வியுற்ற கோவிந்தசாமி, அவர்களை நாடினார். ஈற்றில் நவநாதசித்தராலும் பெரியானைக்குட்டி சுவாமிகளாலும் ஆட்கொள்ளப்பட்டு அன்றே ஆண்டியாக மாறினார்.

இவ்வாறு ஒன்றிணைந்த மூவரும், இலங்கைக்கு வருகை தந்தனர். பெரியானைக்குட்டி சுவாமிகளது ஆத்மார்த்த சீடராக கோவிந்த சுவாமிகள் விளங்கினார். அதனால் அவரை அடியவர்கள் 'சித்தானைக்குட்டி சுவாமிகள்' என அழைத்தனர்.

சித்தானைக்குட்டி சுவாமிகள் கொழும்பு, நாவலப்பிட்டி, முன்னேஸ்வரம், கதிர்காமம், மட்டக்களப்பின் காரைதீவு முதலான இடங்களுக்குச் சென்று பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். குறிப்பாக, கதிர்காம திருவிழா காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த இம்மகான், கதிர்காம காட்டில் வழி தப்பியவர்களுக்கு வழிகாட்டியுள்ளார்; ஊமையை பேசவைத்தார்; இறந்த பெண்ணை உயிர்ப்பித்தார்; கடலில் அகப்பட்டவனை மீட்டார்; மாட்டிறைச்சியை மல்லிகைப் பூ ஆக்கினார்;










கடலின் மேலால் நடந்தார்; ஒருமுறை கல்முனை சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச் சேலையை அணைத்தார்; அறுத்த மீனை பலா சுளையாக மாற்றினார். இவ்வாறு, இவர் ஆடிய சித்துகள் இன்னும் பல பல உள்ளன.

2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலை தாக்கியபோது, காரைதீவிலுள்ள சித்தானைக்குட்டி சமாதி கோவில் மட்டும் தப்பியது மிக மிக அற்புதமாகும். ஜீவ சமாதி அடைந்த இந்த மகான், இன்றும் அவரை சரணடைந்தவர்களை எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்து காத்து வருகின்றார்.

2011ஆம் ஆண்டு சுவாமியின் 60 ஆவது குருபூசை தினத்தில் ஐம்பொன் சிலை பிரம்மரிஷி மலை அன்னை சித்தர் இராஜ்குமார் சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


"'ஆதியந்த மொன்றுமிலா ஐயன் வாழ்க
அருட் சக்தி வாழ்க ஐங்கரனும் வாழ்க
சோதி வடிவேல் வாழ்க தூயோர் வாழ்க
தொண்டர்ரெலாம் துயரின்றி வாழ்க வாழ்க
பூதலத்தில் மக்களெல்லாம் ஓர் தாய் பெற்ற
புத்திரர் போல் ஒருமித்து பொழிந்து வாழ்க
சாதிமத பேதமில்லா சன்மார்க்கத்தை தந்த
சித்தர் சித்தானைக்குட்டி வாழ்க வாழ்கவே'

(சித்தர்துதி)

> **கதிர்காம திருவிழா காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த இம்மகான், ஊமையை பேசவைத்தார்; இறந்த பெண்ணை உயிர்ப்பித்தார்; கடலின் மேலால் நடந்தார்; கல்முனை சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச் சேலையை அணைத்தார். இவ்வாறு, இவர் ஆடிய சித்துகள் இன்னும் பலப் பல உள்ளன**

> **2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலை தாக்கியபோது, காரைதீவிலுள்ள சித்தானைக்குட்டி சமாதி கோவில் மட்டும் தப்பியது மிக மிக அற்புதமாகும். ஜீவ சமாதி அடைந்த இந்த மகான், இன்றும் அவரை சரணடைந்தவர்களை எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்து காத்து வருகின்றார்**

# புதையலுக்காக சிறுவன் நரபலி



புதையலுக்கு ஆசைப்பட்டு சிறுவனை கடத்தி நரபலி கொடுத்த 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாசிக் மாவட்டம் மலேகாவ் தாலுகா போகனே சிவார் கிராமத்தில் தனது பெற்றோருடன் சிறுவன் வசித்து வந்ததுள்ளான்.

மற்ற சிறுவர்களுடன் வீட்டருகே உள்ள மைதானத்தில் கடந்த 16-ந் திகதி விளையாட சென்ற குறித்த சிறுவன் நீண்ட நேரமாக வீட்டிற்கு திரும்பவில்லை. பல இடங்களில் தேடியும் மகனை கண்டுபிடிக்க முடியாததை தொடர்ந்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்

இந் நிலையில் சம்பவத்தன்று சிறுவனை அதே கிராமத்தை சேர்ந்த 4 பேர் சேர்ந்து கடத்தி சென்றது பொலிஸாருக்கு தெரியவந்தது. அந்த 4 பேரையும் பிடித்து தீவிரமாக விசாரித்தனர். புதையலுக்கு ஆசைப்பட்டு சிறுவனை கடத்தி நரபலி கொடுத்ததாகவும், அங்குள்ள மைதானத்தில் சிறுவனின் உடலை புதைத்து வைத்துள்ளதும் தெரியவந்தது. இதையடுத்து பொலிஸார் அங்கு சென்று பாதி புதைந்த நிலையில் கிடந்த சிறுவனின் உடலை மீட்டுள்ளனர் .

# சர்ச்சையில் சுதீப்பின் சிகை அலங்காரம்



பிரபல கன்னட நடிகரான சுதீப், ஹெப்பிலி என்ற படத்தில் சுதீப் தலையில் ஒரு பக்கத்தில் முடியை வெட்டி இன்னொரு பக்கம் நீளமாக விட்டு வித்தியாசமாக சிகை அலங்காரம் செய்து இருந்தார். இதை பார்த்த மாணவர்கள் சுதீப்பை போலவே தலைமுடியை வெட்டிக்கொண்டு பாடசாலைக்குச் செல்கின்றனர்.

இதனால் கடுப்பான ஆசிரியர்கள் அந்த பகுதியில் உள்ள சலூன் கடைகளுக்கு எழுதி உள்ள கடிதத்தில், "ஹெப்பிலி படத்தின் சுதீப் சிகை அலங்காரத்தை பார்த்து பள்ளி மாணவர்களும் தலையில் ஒரு ஓரத்தில் முடியை வெட்டிவிட்டு மற்றொரு ஓரத்தில் முடியை நீளமாக வைத்துக்கொண்டு வருகிறார்கள்.

இந்த பழக்கத்தால் கல்வியில் அவர்களுக்கு ஆர்வம் குறைகிறது. பாடசாலை மாணவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி தலைமுடியை திருத்துங்கள் என்று கூறியுள்ளனர்.

# சூதாட்ட தரகர் வீட்டில் கட்டுக்கட்டாக பணம்



மகாராஷ்டிராவில் கிரிக்கெட் சூதாட்ட தரகரின் வீட்டில் கட்டுக்கட்டாக 17 கோடி ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர், தரகர் மூலம் ஒன்லைன் சூதாட்டத்தில் 58 கோடி ரூபாய் முதலீடு செய்து இழந்ததாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்து, நாக்பூர் அருகே உள்ள கோண்டியா பகுதியைச் சேர்ந்த கிரிக்கெட் சூதாட்ட தரகர் சோந்து நவரத்ன ஜெயின் என்பவருக்கு சொந்தமான இடத்தில் காவல்துறையினர் சோதனை நடத்தினர்.

நவரத்ன ஜெயின் வீட்டில் கட்டுக்கட்டாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகளைக் கண்டு காவல்துறையினரே மிரட்சியடைந்தனர்.

அவற்றை கைகளால் எண்ண முடியாது என்பதால், உடனடியாக இயந்திரங்களைக் கொண்டு வந்தது எண்ணி முடித்தனர்.

நவரத்ன ஜெயின் வீட்டில் இருந்து 17 கோடி ரூபாய், 4 கிலோ கிராம் தங்கம், 200 கிலோ கிராம் வெள்ளிப்பொருட்களை பறிமுதல் செய்து பெட்டி பெட்டியாக காவலர்கள் தூக்கிச் சென்றனர். இதனிடையே, சூதாட்ட தரகர் துபாய்க்கு தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

# பலாத்காரத்தில் முடிந்த 'பப்ஜி' காதல்

பப்ஜி விளையாட்டின் மூலம் ஏற்பட்ட காதலால், பெண் ஒருவர் பலாத்காரம் செய்யப்பட்ட நிலையில் அவரது காதலன் தலைமறைவாகி உள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையின் சாண்டாக்ரூஸ் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர் பந்த் நகர் பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில், 'சாண்டாக்ரூஸ் பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவருடன் பப்ஜி விளையாட்டின் போது நட்பு ஏற்பட்டது. இந்த நட்பு காதலாக மாறியது. அந்த நபர் என்னை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தார்.

அவரது பேச்சை நம்பி, அவருடன் ஹோட்டலுக்கு சென்றேன். அங்கே என்னை அவர் பாலியல் பலாத்காரம் செய்தார். அந்த நபர் தலைமறைவாக உள்ளதால் அவரை தேடி வருகின்றனர்.

ஏதென்ஸ்

# கிரீஸில் காட்டுத்தீ; 2,500 பேர் வெளியேற்றம்



கிரீஸ் நாட்டில் இதுவரை இல்லாத வகையில் நடப்பு ஆண்டில் பெரிய அளவில் காட்டுத்தீ பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

அந்நாட்டிற்கு உட்பட்ட கோர்பு தீவில் திடீரென பல இடங்களில் காட்டுத்தீ பரவியுள்ளது. இதனால், தீயை அணைக்கும் பணியில் வீரர்கள் போராடி வருகின்றனர். இதுவரை 2,500 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

சுற்றுலாவாசிகள் அதிகம் விரும்ப கூடிய ரோட்ஸ் தீவின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் கடந்த வாரம் செவ்வாய் கிழமை பெரிய அளவில் காட்டுத்தீ பரவியது.

இதனை தொடர்ந்து, லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்புக்காக முன்பே தப்பி வெளியேறி விட்டனர்.

# 1,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்த மைக்ரோசா:.ப்ட்




உலகின் பெரும் நிறுவனங்கள் தனது ஊழியர்களை வேலை நீக்கம் செய்து வருகிறது. இது பல தனியார் ஊழியர்களிடத்தும் பெரும் அச்சத்தை உருவாக்கி உள்ளது. மெட்டா, கூகுள், மைக்ரோசொஃப்ட் போன்ற பெரு நிறுவனங்கள் கடந்த சில மாதங்களாக ஆயிரக்கணக்கான ஊழியர்களை பணி நீக்கம் செய்திருந்தது.

இந்நிலையில், மைக்ரோசாப்ட் நிறுவனம் கடந்த வாரத்தில் மேலும் 1,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்து அதிர்ச்சி அளித்துள்ளது. இதில் பெரும்பாலும் விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவை குழுக்களில் பணி செய்து வந்த ஊழியர்கள் தான் அதிகம் என்று கூறப்படுகிறது.

இது வரை மைக்ரோசாப்ட் நிறுவனம் பணிநீக்கம் செய்த ஆதாரங்களை பார்க்கையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட் 10,000-க்கும் மேற்பட்ட ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கியுள்ளது. கடந்த வாரம் 1000 க்கும் மேற்பட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளது.



இலங்கை எதிர் பாகிஸ்தான்

# 2ஆவது டெஸ்ட் மழையால் பாதிப்பு

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளில் மழை காரணமாக 10 ஓவர்களை மாத்திரமே வீசுவது சாத்தியமாகியிருந்தது.

நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், நேற்றைய நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் அப்துல்லாஹ் ஷஃபிக் 87 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பாபர் அஸாம் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

முன்னதாக தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களையே இலங்கை பெற்றிருந்தது.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

## தொடரை 1-0 எனக் கைப்பற்றிய இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரை 1-0 என இந்தியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை வென்றிருந்த இந்தியா, போர்ட் ஒஃப் ஸ்பெய்னில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் மழை காரணமாக ஆட்டம் இடம்பெறாமல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த இரண்டாவது போட்டியைத் தொடர்ந்தே 1-0 என தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 438/10 (துடுப்பாட்டம்: விராட் கோலி 121, றோஹித் ஷர்மா 89, இரவீந்திர ஜடேஜா 61, யஷஸ்வி ஜைஸ்வால் 57, இரவிச்சந்திரன் அஷ்வின் 56 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 3/89, கேமார் றோச் 3/104, ஜேஸன் ஹோல்டர் 2/57, ஷெனொன் கப்ரியல் 1/74)

மே. தீவுகள்: 255/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 75, அலிக் அதனஸே 37, டிட்டினேரியன் சந்திரபோல் 33, கேர்க் மக்கென்ஸி 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 5/60, இரவீந்திர ஜடேஜா 2/37, முகேஷ் குமார் 2/48, இரவிச்சந்திரன் அஷ்வின் 1/61)

இந்தியா: 181/2 (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 57, இஷன் கிஷன் ஆ.இ 52, யஷஸ்வி ஜைஸ்வால் 38, ஷுப்மன் கில் ஆ.இ 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷெனொன் கப்ரியல் 1/33, ஜோமெல் வொரிக்கான் 1/36)

மே. தீவுகள்: 76/2 (வெ.இ: 365 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 28, டிட்டினேரியன் சந்திரபோல் ஆ.இ 24, ஜெர்மைன் பிளக்வூட் ஆ.இ 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 2/33) போட்டியின் நாயகன்: மொஹமட் சிராஜ்




கல்குடா பிறீமியர் லீக் தொடரில்

## சிறந்த கோல் காப்பாளராக அன்ஸார் பின் ஆஸிக்

அஸ்ஹர் இப்றாஹிம்

வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட கல்குடா பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் சிறந்த கோல்காப்பாளர் விருதையும், கோல் காப்பாளர் கையுறையும் வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் கோல் காப்பாளர் அன்ஸார் பின் ஆஸிக் பெற்றுக் கொண்டார்.

## இன்டர் மிலன் செல்லும் மார்டினெஸ்?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான அஸ்டன் வில்லாவின் கோல் காப்பாளரான எமிலியானோ மார்டினெஸைக் கைச்சாத்திடும் கோரிக்கையை இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு பீறிமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கு மிலனின் கோல் காப்பாளர் அன்ட்ரே ஒனானா சென்றமையைத் தொடர்ந்தே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

$332 மில்லியன் டொலர்களுக்கு

## மப்பேயைக் கைச்சாத்திட சவுதி கழகம் கோரிக்கை



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பேயை சாதனை ரீதியிலான 332 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு கைச்சாத்திடும் கோரிக்கை சவுதி அரேபியக் கழகமான அல் ஹிலால் நேற்று முன்தினம் முன்வைத்துள்ளது.

இக்கோரிக்கையை உறுதிப்படுத்திய பரிஸ் ஸா ஜெர்மைன், 24 வயதான மப்பேயுடன் பேரம்பேசல்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை அல் ஹிலாலுக்கு வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் இக்கோரிக்கையில் மப்பே ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது.